# ரயில் பயணியின் உயிர் காக்க உதவியவர்களுக்கு பாராட்டு

சென்னை, பிப். 27–

சென்னை மெட்ரோ ரயில், இரு தினங்களுக்கு முன், நேரு பூங்கா – எழும்பூர் இடையே சென்றபோது, பயணி ஒருவர் மருத்துவ அவசர நிலைக்கு ஆளானார். ரயில் ஓட்டுனர் பி.எம்.ராஜீவ், மற்றும் எழும்பூர் மெட்ரோ நிலைய கட்டுப்பாட்டாளர் ஜே.ராஜேஷ் ஆகியோர், துரிதமாக செயல்பட்டு, பயணிக்கு முதலுதவி செய்தனர். பின், அருகில் உள்ள மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றனர். சிகிச்சைக்குப் பின், பயணி நலமடைந்தார்.

சரியான நேரத்தில் துரிதமாக செயல்பட்டு, பயணியின் உயிரை காப்பாற்றிய ரயில் ஓட்டுனர் மற்றும் நிலைய கட்டுப்பாட்டாளருக்கு, கோயம்பேடு மெட்ரோ ரயில் நிர்வாக தலைமையகத்தில் பாராட்டு நிகழ்ச்சி நேற்று நடந்தது. சென்னை மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குனர் பிரதீப் யாதவ், ரயில் ஓட்டுனர் மற்றும், நிலைய கட்டுப்பாட்டாளருக்கு, பண பரிசு மற்றும் நற்சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

நிகழ்ச்சியில், மெட்ரோ ரயில் இயக்குனர்கள், சுஜாதா ஜெயராஜ், ராஜீவ்நாராயண் திவேதி, ராஜேஷ் சதுர்வேதி மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.



மெட்ரோ ரயில் பயணத்தில், பயணியின் உயிர் காக்க உதவியவர்கள், அதிகாரிகளால் பாராட்டப்பட்டனர்.